www.padippakam.com



# பிரித்தானியர்களின் பிரித்தாளும் தந்திரம்




47

இலங்கைக்கு வந்த ஐரோப்பியர்களில் பிரித்தானியர்களே மிகவும் தந்திரசாலிகளாகவும் பிரித்தாள்வதில் வல்லவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் தமிழர்கள் கண்டியச் சிங்களவர்கள் கரையோரச் சிங்களவர்கள் என்ற மூன்று பிரிவினருக்கும் இயல்பாக இருந்த முரண்பாட்டை வளர்த்து விடுவதன் மூலம் தங்களது ஆட்சியை எந்தவித இடர்பாடுமில்லாமல் தொடரலாம் எனத் தெரிந்து கொண்டார்கள்.

அவர்களது ஆட்சியின் தொடக்க காலத்தில் அவர்களுக்கு அச்சுறுத்தலாக இருந்தவர்கள் வன்னியர்களும் (குறிப்பாக பண்டாரவன்னியன்) கண்டியச் சிங்களவர்களுமே. கண்டியச் சிங்களவர்கள் அக்காலகட்டத்தில் முழுமையாக ஒரு சிங்கள தேசிய இனம் என்ற அடிப்படையில் உருப்பெறவில்லை. அவர்கள் வன்னி யாழ்ப்பாணம் மற்றும் தமிழ் நாட்டுத் தமிழர்களுடன் திருமண உறவுகளில் இரத்தக் கலப்புடையவர்களாகவே இருந்தார்கள். ஏற்கனவே போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்தில் அவர்களுக்கெதிரான வன்னியர்களின் போராட்டத்திற்கு



கண்டியர்களின் ஆதரவும் கண்டியர்களின் போராட்டத்திற்கு வன்னியர்களின் ஆதரவும் இருந்தது. நூற்றுக்கு 90 வீதமான கண்டியப் பிரதானிகளது தாய் வழி அல்லது தந்தைவழி என்பது தமிழாகவே இருந்தது.

ஆனால் கரையோரச் சிங்களவர்கள் இதற்கு முற்றிலும் எதிர்மாறாகவே இருந்தார்கள். ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்பிருந்தே அவர்கள் தமிழர்களுடன் இரத்தக் கலப்பு எதுவும் இல்லாமல் சிங்கள இனத் தனித்துவத்தையுடையவர்களாக இருந்தார்கள். பௌத்த மதம் அவர்களைத் தமிழர்களிடமிருந்து அன்னியப்படுத்தி வைப்பதற்கு ஒரு கருவியாக இருந்தது. பிற்காலத்தில் ஐரோப்பியக் கலப்பு மற்றும் கிறிஸ்தவ மத மாற்றம் என்பன அவர்களிடையே அதிகம் ஏற்பட்டபோதும் அது எந்தவிதத்திலும் தமிழருடனான நெருக்கத்தை ஏற்படுத்தவில்லை.

கண்டியச் சிங்களவர்களுடனான அவர்களது பகைமை உணர்வு தமிழர் மீதான பகைமை உணர்வைவிட அக்காலத்தில் மிக அதிகளவுக்கே இருந்தது. கண்டியச் சிங்களவர்கள் இந்து மதத்திலிருந்து பௌத்த மதத்துக்குள் தொற்றிக் கொண்ட சாதி அமைப்பின் அடிப்படையில் கரையோரச் சிங்களவர்களை இழிசனர்களாக கருதி ஒதுக்கி வைத்தனர். கரையோரச் சிங்களவர்கள் கண்டியர்கள் தமிழர்கள் மற்றும் தமிழகத் தொடர்புகள் மூலம் பௌத்த தர்மத்துக்கும் 'சங்க'வுக்கும் துரோகம் செய்துவிட்டதாகக் கருதி அவர்களை விடத் தாங்களே உண்மையான பௌத்தர்கள் 'சங்க'வழி நடப்பவர்கள் என்று எண்ணிவந்தனர்.

பிரித்தானியர்கள் எப்போதும் தமிழர்களுடன் தொடர்புடைய கண்டியர்களே தங்களுக்கு ஆபத்தானவர்கள் என்று நினைத்தார்கள். கண்டியின் கடைசி மன்னனான ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் தமிழ்நாட்டுத் தொடர்புடையவனாதலால் இவர்களை மிகவும் எச்சரிக்கையுடன் கையாள வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

அதன்படி தமிழர்களுக்கும் அவர்களுக்குமிடையில் நிரந்தரப் பிளவை ஏற்படுத்துவது அதே நேரம் கரையோரச் சிங்களவர்களுடன் அவர்கள் ஒன்றுபடாதபடி தடுப்பது என்ற இரண்டு அடிப்படைகளில் தங்களது காய்களை நகர்த்தினார்கள்.

அதன் முதற்கட்டமாக கரையோரச் சிங்களவர்களை கிறிஸ்தவர்களாக மாற்றும் முயற்சிக்கு ஊக்கமளித்ததோடு ஆங்கிலக் கல்வி மற்றும் உயர்கல்வி வாய்-ப்பு, சாராயக்குத்தகை உரிமை, சிறுகைத்தொழில்களை நிர்மாணிக்கும் உரிமை என்பவற்றை வழங்கியதன் மூலம் அவர்கள் மத்தியில் தங்களுக்குச் சார்பான ஒரு பணக்கார வர்க்க-த்தை உருவாக்கி வளர்த்துவிட்டார்கள்.

அடுத்த கட்டமாக கண்டியச் சிங்களவர்களுக்கு பௌத்த மதமும் அதன் ஆகமமும் ஊறு செய்யப்பட முடியாதவை, 'சங்கவும்' அதன் வழிபாட்டுத்தலங்களும் பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதை தாங்கள் ஏற்றுக்கொள்வதாக 1815ல் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனை கைது செய்தபோது செய்யப்பட்ட சரணகதி ஒப்பந்தத்தின் போது உறுதியளித்தனர். ஆனால் நடைமுறையில் கரையோரச் சிங்களவர்கள் மத்தியில் கிறிஸ்தவ மதமும் ஆங்கிலக் கல்வியும் முக்கியத்துவம் பெறுவதற்கு பிரித்தானியர்கள் தூண்டுகிறார்கள் என்பதை அறிந்ததும் கண்டியர்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர்.

1818ம் ஆண்டு இது கண்டியப் பிரதானிகளில் ஒருவனான ஹெப்பிட்டிப்பொலவின் தலைமையில் பிரித்தானியர்களுக்கு எதிரான பெரிய எதிர்ப்பு யுத்தமாக வெடித்தது. ஆனால் கண்டியர்கள் எதிர்பார்த்தது போல் இது பெரிய வெற்றியளிக்கவில்லை. பிரித்தானியர்களின் பீரங்கிகளுக்கு முன்னாலும் நன்கு பயிற்றப்பட்ட படைப் பலத்துக்கு முன்னாலும் அவர்களால் நின்றுபிடிக்க முடியவில்லை.

ஹெப்பிட்டிப்பொலவின் தோல்வியுடன் கண்டியர்களின் எதிர்ப்பு அடங்கிவிட்டாலும் தாங்கள் பிரித்தானியர்களால் பழிவாங்கப்படுகின்றோம் புறக்கணிக்கப்டுகின்றோம் என்கிற உணர்வு அவர்கள் மத்தியில் ஏற்பட்டது. எஞ்சியிருந்த கண்டியப்பிரதானிகள் பிரித்தானியர்களை எதிர்ப்பதைவிடுத்து எப்படி கரையோரச் சிங்களவர்களைப் போல அவர்களை ஆதரித்து சலுகைகளைப் பெறலாம் என்பதுபற்றி சிந்திக்கத்தலைப்பட்டனர்.

கண்டியிலும் கரையோரத்திலும் நிலைமைகளை இவ்வாறு தங்களுக்குச் சாதகமாக வருமாறு பார்த்துக்கொண்ட பிரித்தானியர்கள் அடுத்து யாழ்ப்பாணக்குடா நாட்டின் மீதும் தங்கள் கவனத்தைச் செலுத்தினார்கள்.

கண்டியையும் கரையோரத்தையும் விட யாழ்ப்பாணக்குடாநாட்டை வித்தியாசமாகக் கையாளவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தது. யாழ்ப்பாணக்குடாநாடு ஏற்கனவே சகலவகைகளிலும் தமிழ் நாட்டுடன் தொடர்பு வைத்திருந்தது. இந்தியாவில் ஏற்படக்கூடிய தங்களுக்கெதிரான கிளர்ச்சிகள் போராட்டங்கள் யாழ்ப்பாணத்திற்கூடாக இலங்கைக்கும் பரவிவிடக்கூடாது என்பதில் அவர்கள் கவனமாக இருந்தார்கள்.

**கண்டியச் சிங்களவர்கள் அக்காலகட்டத்தில் முழுமையாக ஒரு சிங்கள தேசிய இனம் என்ற அடிப்படையில் உருப்பெறவில்லை. அவர்கள் வன்னி, யாழ்ப்பாணம் மற்றும் தமிழ்நாட்டுத் தமிழர்களுடன் திருமண உறவுகளில் இரத்தக் கலப்புடையவர்களாகவே இருந்தார்கள். நூற்றுக்கு 90 வீதமான கண்டியப் பிரதானிகளது தாய் வழி அல்லது தந்தைவழி என்பது தமிழாகவே இருந்தது.**

தமிழ்நாடு திருநெல்வேலியில் நடந்த வீரபாண்டிய கட்டப்பொம்மனின் எழுச்சியும் புதுக்கோட்டையில் நடந்த மருது பாண்டியர்களது எழுச்சியையும் யாழ்ப்பாண மக்களை தூண்டிவிட்டுவிடக் கூடாது என்பதில் அதிக கவனம் செலுத்தினார்கள். கடலை ஆள்பவனே நாட்டை ஆளலாம் என்ற கொள்கை முக்கியத்துவம் பெற்றிருந்த அக்காலத்தில் இலங்கையில் தமிழர் பிரதேசத்திலிருந்து திருகோணமலைத்துறைமுகம் பிரித்தானியர்களுக்கு மிகமிக முக்கியமான ஒன்றாக இருந்தது. எனவே யாழ்ப்பாணத்தில் எந்தவித எழுச்சியும் உருவாகாத விதத்தில் அங்கிருந்த தமிழர்களைக் கையாளவேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தார்கள். அதனடிப்படையில் இலங்கையில் மற்ற எந்த இடத்திலும் இல்லாதவாறு யாழ்ப்பாணக்குடா நாட்டில் மட்டும் அதிகளவுக்குக் கல்லூரிகளை நிறுவி ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு இந்து மதத்திற்கான சுதந்திரம் மற்றும் அதையொட்டிய கல்வி என்பவற்றுக்கும் அனுமதியளித்தனர்.

- நக்கீரன்

படிப்பகம்